2021 பிப்ரவரி 25] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

உள்ளாட்சி அமைப்புகள், வாரியங்கள், ஆணையங்கள், சங்கங்கள் உள்ளிட்ட அனைத்து பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் பொருந்தும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உத்தரவு தற்போது அரசுப் பணியில் இருக்கும் அனைவருக்கும் மற்றும் இந்த ஆண்டு, அதாவது, *31–5–2021* அன்று பணியிலிருந்து ஓய்வுபெறும் பணியாளர்களுக்கும் பொருந்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) 2020-2021 ஆம் கல்வியாண்டில் 9, 10 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணாக்கர்கள் தேர்வுகள் ஏதுமின்றி தேர்ச்சி குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ் நோய்த் தொற்றைத் தடுப்பதற்காக மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டில் *25–3–2020* முதல் தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின்கீழ் ஊரடங்கு உத்தரவு பல்வேறு தளர்வுகளுடன் அமலில் இருந்து வருகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு இந்த நோய்த் தொற்றிலிருந்து மக்களைக் காத்து, அவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்கி, முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

2020–2021 ஆம் கல்வியாண்டில் கொரோனா நோய்த் தொற்று பரவலைத் தடுப்பதற்கு பள்ளிகள் மூடப்பட்டு, கொரோனா நோய்த் தொற்று ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த ஜனவரி மாதம் *19* ஆம் தேதி முதல், *10* மற்றும் *12* ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. அனைத்து மாணவர்களுக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க ஏதுவாக வைட்டமின் மற்றும் துத்தநாக மாத்திரைகள் வழங்கப்பட்டன. இந்தக் கல்வியாண்டு முழுவதும் மாணாக்கர்கள் கல்வித் தொலைக்காட்சி மூலமாக மட்டுமே கல்வி பயின்று வந்தனர். மாணாக்கர்கள் தொலைக்காட்சி மூலமாகவும், இணையதளம் மூலமாகவும் கல்வி பயின்று வருவதில் ஏற்படும் சிரமங்களைக் கருத்தில்கொண்டு, பாடத் திட்டங்கள் குறைக்கப்பட்டன.

மேலும், இந்தக் கல்வியாண்டில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்கொண்ட அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில்கொண்டும், பெற்றோர்களின் கோரிக்கையைக் கருத்தில்கொண்டும், கல்வியாளர்களின் கருத்துகளைப்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2021 பிப்ரவரி 25

பரிசீலித்தும், 2020–2021 ஆம் கல்வியாண்டில் 9, 10 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணாக்கர்கள் அனைவரும் முழு ஆண்டுத் தேர்வுகள் மற்றும் பொதுத் தேர்வுகள் ஏதுமின்றி தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாணவர்களுக்கான மதிப்பெண் மதிப்பீட்டு நெறிமுறைகள் அரசினால் விரிவாக வெளியிடப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் ஓய்வுபெறும் வயது அதிகரிப்பு, 9, 10 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணாக்கர்கள் தேர்வுகள் ஏதுமின்றி தேர்ச்சி தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும் தமிழகத்தில் வரலாறு படைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இன்றும் ஒரு வரலாற்றைப் படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையிலும் இந்திய நாட்டின் வரலாற்றில் யாருமே செய்திராத சாதனையைப் படைத்திருக்கிறார். அனைவரும் தேர்தல் களத்தில்தான் வாக்குறுதி தருவது வழக்கம். ஆனால், தேர்தலுக்கு முன்பாகவே விவசாயிகளின் கடன்கள் அனைத்தையும் இரத்து செய்து, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் முதன்முறையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரலாற்றைப் படைத்துக் காட்டியிருக்கிறார்கள். அதற்குக் கோடானு கோடி நன்றியை நாங்கள் அனைவரும் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

முற்பகல் 11–15

அதேபோல, தற்போதைய சூழ்நிலையில் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களின் நிலைமைகளை மனதிலே கொண்டு வெளியிடப்பட்ட அறிவிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பு அமைந்திருக்கின்றது. மாணவர்களின்